<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 27/2015 C/W O.S.122/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சந்திரசேகர் (எ) சந்திரசேகரன் | நாள் | 21.09.2022 |
| தகப்பனார் பெயர் | சண்முகம் | | |

**<u>1 முதல்3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை:-</u>**

1) என் தந்தை பெயர் சண்முகம். என் தந்தை சண்முகத்தின் முதல் மனைவியின் பெயர் பொன்னி என்றால் சரிதான். மேற்படி முதல் மனைவி பொன்னி உயிருடன் இருக்கும்பொழுது தான் என் தந்தை என் தாயாரான 1ம் வாதியை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டார் என்றால் சரியல்ல.

2) என் தந்தையின் முதல் மனைவி பொன்னி எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. என் தாயாரை என் தந்தை எந்த வருடத்தில் திருமணம் செய்துகொண்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் கோவிந்தராஜ் என்றால் சரிதான். மேற்படி கோவிந்தராஜுக்கும், 1ம் பிரதிவாதி இந்திராணிக்கும் பிறந்த குழந்தைகள் தான் 2, 3 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

3) மேற்படி என் தந்தை சண்முகத்திற்கும், அவரது முதல் மனைவி பொன்னிக்கும் பிறந்த குழந்தை தான் கோவிந்தராஜ் என்றால் சரிதான். என் தந்தை சண்முகத்திற்கும், அவரது முதல் மனைவி பொன்னிக்கும் இரண்டு குழந்தைகள் என்றாலும், அதில் ஒரு குழந்தை இறந்துவிட்டது என்றாலும், மற்றொருவர் தான் கோவிந்தராஜ் என்றாலும் சரிதான்.

4) O.S.122/2015 மற்றும் O.S.27/2015 ஆகிய வழக்குகளில் உள்ள சொத்து என் தந்தை வழி பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான்.

**(பிரதிவாதிகள் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.